தமிழ்நாட்டிலேயே, ஏராளமாக உப்பு கிடைக்கிறது. நான் சென்ற தொடர் கூட்டத்திலேயே கேட்டிருக்கிறேன். இந்த உப்பு தொழிற்சாலையைக் கொண்டு உரத் தொழிற்சாலை அமைக்க, ஜப்பான் நாட்டுத் துணை கொண்டு அமைக்க, நம்முடைய அரசு முயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செங்கற்பட்டு மாவட்டம் எப்படி கவனிக்கப்பட்டு வருகிறது என்பதை இதிலிருந்து அவர்கள் தெரிந்து கொள்வார்கள். கோவளத்திலே, பிரம்மாண்டமான கூட்டுத் தொழிற்சாலை ஏற்பட இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டம் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்படுகிறது என்று பொது மக்களிடத்திலே ஒரு கருத்து நிலவுகிறது. அரசால் ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்சாலையைப் பற்றி, குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் குழுவினர் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற கடற்கரைப் பகுதியில் சுற்றுப் பயணம் மேற் கொண்டு முடித்துவிட்டார்களா? ஏதாவது அறிக்கையை அரசுக்கு அனுப்பிவிட்டார்களா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே சொன்னேன். அப்படி ஆராயப்பட்டு ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது.

Suicide by prisoner in Mental Hospital.

* 581 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that a prisoner undergoing treatment at the Mental Hospital in Madras committed suicide about the 6th September 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிவப்பிரகாசம் என்ற மனநோய் குற்றவாளி 5—9—1973 அன்று சென்னை மனநோய் மருத்துவ மனையில் தற்கொலை செய்துகொண்டார்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, எந்த முறையிலே தற்கொலை செய்து கொண்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்கொலே என்றுதான் இருக்கிறது.

சென்னே மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்பு சட்டம்

* 582 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னே மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (Madras City Tenants Protection Act) விதிகளேக் கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனேயில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லே.

Sivakasi Panchayat Union Council

* 583 Q.—THIRU N. DENNIS : THIRU K. SUPPU. Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Sivakasi Panchayat Union Council has been dissolved by the Government in March 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டையின் காரணமாகவும், ஒன்றியக்குழு அதன்மேல் சட்டப் பூர்வமாக அளிக்கப்பட்ட கடமைகளேத் தொடர்ந்து செய்யத் தவறியதன் காரணத்திற்காகவும் அரசு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுவை 17—3—1973-ல் இருந்து மூன்று மாதத்திற்கு கலேக்க உத்திரவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள அரசின் உத்திரவினே சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியக் குழு மூன்று மாதங்கள் மேற்கொண்டு செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அதன்பின்னர் அரசு இதுபற்றி மீண்டும் பரிசீலிக்கலாம் என்ற கருத்தினேயும் சுப்ரீம் கோர்ட் வெளியிட்டிருக்கிறது. கோர்ட்டாரின் உத்திரவுக்கிணங்க ஒன்றியக் குழுவை செயல்பட அனுமதிக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்.